தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மு. ஜெகதீசன் Ph.D.,
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 16-11-2015

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## வேளாண் பல்கலையில் இலவச கண் பரிசோதனைமுகாம்

தமிழ் நாடு வேளாண்மைப் பல்கலைக் கழக நாட்டு நலப்பணித்திட்டம் மற்றும் லோட்டஸ் கண் மருத்துவமனை, கோயமுத்தூர் இணைந்துவேளாண் பல்கலை கழக வளாகத்தில் 14-11-2015 அன்று மாபெரும் இலவச கண் பரிசோதனைமுகாம் நிகழ்த்தியது.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக முதன்மையர் (வேளாண்மை) முனைவர். ச. மகிமைராஜா அவர்கள் முகாமைத் துவக்கி வைத்தார். பல்கலை பணியாளர்கள், ஆசிரியர்கள், நாட்டு நலப்பணித்திட்ட மாணவர்கள் உட்பட 400 நபர்களுக்கு இலவச கண் பரிசோதனை நடத்தி ஆலோசனை வழங்கப்பட்டது.

லோட்டஸ் மருத்துவமனை மருத்துவர் திருமதி என். வித்யா அவர்கள் சர்க்கரைக் கண் நோய், பார்வைக் குறைபாடுகண்டறிதல், மாறுகண், கண் புரை, திரவ அழுத்த நோய் (Glaucoma), லேசிக் சிகிச்சைஆகியவை குறித்து விளக்க உரை நிகழ்த்தினார்.

லோட்டஸ் கண் மருத்துவமனை சார்பில் ஒருங்கிணைப்பாளர் திரு. ஆர் சண்முகசுந்தரம் மற்றும் வேளாண்மைப் பல்கலைக்கழக நாட்டுநலப்பணித்திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் க. குமுதா மற்றும் அலுவலர்கள் முனைவர் எம். ஆர். லதா, முனைவர் எ. சுகன்யா, முனைவர் எ. தங்கஹேமாவதி, முனைவர் எஸ். செந்தில்நாதன் மற்றும் மாணவர். சூர்யா ஆகியோர் இணைந்து முகாம் ஏற்பாடுகளை செய்தனர்.

உதவி மக்கள் தொடர்பு அலுவலர்